சுருக்கம்

சமூக நலம் – குழந்தைகள் நலம் – பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் தற்போது வழங்கப்பட்டுவரும் நிதி உதவித் தொகையை உயர்த்தி முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட( சந–5)த் துறை

அரசாணை (நிலை) எண்.67 நாள் 14–09–2011
ஆவணி 28, திருவள்ளுவர் ஆண்டு 2042

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.199, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 31–12–2001.
2. அரசாணை (நிலை) எண்.159, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 09–08–2010.
3. சமூக நல இயக்குநரின் கடித ந.க.எண்.23456/குந.3/11, நாள் 09–08–2011 மற்றும் 19-08–2011
4. அரசாணை (நிலை) எண்.55, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 13–08–2011.

----

ஆணை:

பெண் கல்வியை மேம்படுத்தவும், பெண் சிசுக் கொலையை ஒழிக்கவும், ஆண் குழந்தைகளை மட்டுமே விரும்பும் மனப்போக்கை கட்டுப்படுத்தவும், சிறு குடும்ப முறையை ஊக்குவிக்கவும், 1992ம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட சீரிய திட்டமான பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் தமிழ்நாட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. பெண் குழந்தைகளுக்கு அதிக நிதிப்பயன் கிடைத்திடும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் இத்திட்டம் முற்றிலும் மாற்றியமைக்கப்பட்டது.

2. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தினை தமிழ்நாட்டில் உள்ள முகாம்வாழ் இலங்கை தமிழர்களுக்கும் நீட்டித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. 04.08.2011 அன்று சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற 2011–12 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவு திட்ட நிதிநிலை அறிக்கையால் பின்வருமாறு அறிவிப்பு செய்யப்பட்டது:

"பெண் சிசுக் கொலையைத் தடுத்து, பெண் கல்வியை ஊக்கப்படுத்தும் பொருட்டு, தற்போது பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தில் ஒரு பெண் குழந்தை மட்டும் உள்ள பெற்றோர் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து

கொள்ளும்போது பெண் குழந்தைக்கு 22,200 ரூபாய் வைப்புத் தொகையும் இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் உள்ள பெற்றோர் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொள்ளும்போது பெண் குழந்தைகளுக்கு தலா 15,200 ரூபாய் வைப்புத் தொகையும் வழங்கப்பட்டு வருகிறது. இனி, முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஒரு பெண் குழந்தைக்கான வைப்புத் தொகை 50,000 ரூபாயாகவும், இரண்டு பெண் குழந்தைகளுக்கான வைப்புத் தொகை 25,000 ரூபாயாகவும் இந்த அரசால் உயர்த்தி வழங்கப்படும். இது, பெண் சிசுக்கொலைத் தடுப்பிற்கு ஒரு முக்கிய உந்துசக்தியாகத் திகழும்" என அறிவிக்கப்பட்டுள்ளது.

4. மேற்படி அறிவிப்பினைத் தொடர்ந்து, சமூக நல இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ள தனது கருத்துருவில், சமுதாயத்தில் பெண்களின் நிலையினை உயர்த்திடும் உணர்வோடும், பெண் சிசுக் கொலையை அறவே ஒழித்திடும் நோக்கோடும், கல்வியில் பெண்களின் நிலையினை உயர்த்திடும் பொருட்டு, 2001 ஆம் ஆண்டு மறுவடிவாக்கம் செய்யப்பட்ட பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், பெண் குழந்தைகளின் ஆரம்ப கல்வி மற்றும் சிறு குடும்ப முறையினை ஊக்குவிப்பதாகவும் அமைந்துள்ளது எனவும், இத்திட்டம், பெண் குழந்தைகள் எத்தகைய சூழ்நிலையில் பிறந்திருந்தாலும் அவர்கள் தங்களது தனித் திறமைகளை முழுமையாக உணர்ந்து, சமுதாயத்தில் சிறப்பான பங்களிப்பை வழங்கிடவும் ஏதுவாக அமைந்துள்ளது என்றும், 2001–2002 முதல் 2010–2011 வரை இத்திட்டத்திற்கென ரூ.550.71 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை 3,61,518 பெண் குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர் என்றும் தெரிவித்துள்ளார். எனவே, 2011-2012–ஆம் ஆண்டின் திருத்த வரவு செலவு திட்ட நிதிநிலை அறிவிப்பின்படி, இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித் தொகையினை ஏற்கனவே நடைமுறையில் உள்ள இத்திட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு, உயர்த்தி ஆணை வழங்க தேவையான கருத்துருவினை அரசுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

5. சமூக நல இயக்குநரின் கருத்துருவினை கவனமாக பரிசீலித்த அரசு அதனை ஏற்று பின்வருமாறு ஆணையிடுகிறது:

அ) தற்போது நடைமுறையிலுள்ள பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், ஒரு குடும்பத்தில் ஒரு பெண் குழந்தை மட்டுமே இருப்பின் அந்த பெண் குழந்தையின் பெயரில் தற்போது வழங்கப்பட்டு வரும் ரூ.22,200/– தொகையினை ரூ.50,000/– ஆகவும் (திட்டம்–I), இரு பெண் குழந்தைகள் இருக்கும் குடும்பத்தின் பெண் குழந்தை ஒவ்வொருவருக்கும், தற்போது வழங்கப்பட்டு வரும் ரூ.15,200/– தொகையினை தலா ரூ.25,000/–ஆகவும் (திட்டம்–II) உயர்த்தி வழங்கப்படும்.

ஆ) (i) திட்டம் I ன்படி ஒரு குடும்பத்தில் ஒரு பெண் குழந்தை மட்டும் இருந்தால், இத்திட்டத்தின் கீழ் உயர்த்தி வழங்கப்பட்ட தொகையினைப் பெற அக்குழந்தை 01.08.2011 அன்றோ அல்லது அதற்கு பிறகோ பிறந்திருக்க வேண்டும்.

(ii) திட்டம் II ன்படி ஒரு குடும்பத்தில் இரு பெண் குழந்தைகள் மட்டும் இருந்தால், அவ்விரு பெண் குழந்தைகளும் இத்திட்டத்தின் கீழ் உயர்த்தி வழங்கப்பட்ட தொகையினைப் பெற, இரண்டாவது பெண்குழந்தை 01.08.2011 அன்றோ அல்லது அதற்கு பிறகோ பிறந்திருக்க வேண்டும்.

65



இ) மேற்படி உயர்த்தி வழங்கப்படும் தொகை தமிழ்நாட்டில் உள்ள முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் பெண் குழந்தைகளுக்கும் பொருந்தும்.

ஈ) இத்திட்டம் இனி "முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்" என அழைக்கப்படும்.

6. இத்திட்டத்திற்கான செலவினம் பின்வரும் இரண்டு கணக்குத் தலைப்புகளின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

i) 2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன் 102 குழந்தைகள் நலன் – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JX – பெண் குழந்தை நலனுக்கான திட்டத்திற்கு நிதியுதவி–09 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை. (து.தொ.கு. 2235-02-102-JX-0939).

ii) 2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன் 789 ஆதி திராவிடருக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்– II மாநிலத் திட்டம்– JN – சிறப்புக் கூறுகள் திட்டத்தின் கீழ் பெண் குழந்தைகள் நலத்திற்கான நிதியுதவித் திட்டம் – 09 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை.(து.தொ.கு.2235-02-789–JN- 0935)

7. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவுடன் அதன் அ.சா.எண்.14/DS(VS)/2011 / நிதி (சந) /2011, நாள் 13.09.2011 –ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஷீலா பாலகிருஷ்ணன்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
சமூக நல இயக்குநர், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்(சமூக நல இயக்குநர் வழியாக)
அனைத்து மாவட்ட சமூக நல அலுவலர்கள் (சமூக நல இயக்குநர் வழியாக)
அனைத்து கருவூல அலுவலர்கள்( சமூக நல இயக்குநர் வழியாக)
அனைத்து சம்பள கணக்கு அலவலர்கள் (சமூக நல இயக்குநர் வழியாக)
மாநில கணக்காயர், சென்னை–18.
மாநில கணக்காயர், சென்னை–9

<u>நகல்:</u>
மாண்பு மிகு முதலமைச்சர் அலுவலகம், சென்ன்னை–9
நிதி (சந) த்துறை, சென்னை–9.
மாண்புமிகு சமூக நல அமைச்சரின் முதுநிலை உதவியாளர், சென்னை–9.
நிதித்துறை, சென்னை–9
இருப்புக்கோப்பு/உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

ரா. விஜயலட்சுமி
15/9/11
பிரிவு அலுவலர்
15.9.11